විදේශ කටයුතු, විදේශ රැකියා සහ සංචාරක අමාත්‍යාංශය

**வெளிநாட்டு அலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சு**

**MINISTRY OF FOREIGN AFFAIRS, FOREIGN EMPLOYMENT AND TOURISM**

**ஊடக வெளியீடு**

## வெளிநாடுவாழ் இலங்கையர்களுக்கு வார இறுதி நாட்களில் தூதரக சேவைகளை வழங்குவதற்கான முன்னோடித் திட்டத்தை வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு தொடங்கியுள்ளது

வெளிநாட்டு அலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் விஜித ஹேரத்தின் வழிகாட்டுதலின் கீழ், ஒவ்வொரு மாதமும், குறித்த வார இறுதி நாளொன்றில் வெளிநாடுவாழ் இலங்கையர்களுக்கு கொன்சியூலர் சேவைகளை வழங்குவதற்கான ஒரு முன்னோடித் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது.

இம்முயற்சியானது, இலங்கை புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் மற்றும் வெளிநாடுகளில் உள்ள இலங்கைச் சமூகங்களுக்குத் தேவையான கொன்சியூலர் சேவைகளுக்கான அணுகலை மேம்படுத்துவதற்கான அரசாங்கத்தின் தொடர்ச்சியான முயற்சிகளின் ஒரு பகுதியாகும். வழமையான வேலை நாட்கள் தவிர்ந்த நாளொன்றில் சேவைகளை வழங்குவதானது, தொழில் மற்றும் ஏனைய கடமைகள் காரணமாக வாரத்தில் மற்றும் சாதாரண அலுவலக நேரங்களில் இலங்கைத் தூதரகங்கள் மற்றும் பணியகங்களுக்குச் செல்வதில் சிரமங்களை எதிர்கொள்ளும் இலங்கையர்களுக்கு உதவுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

இத்திட்டமானது நடைமுறைப்படுத்தப்படுதலின் ஆரம்ப கட்டமாக, தென் கொரியா (சியோல்), மாலைத்தீவு (மாலே), சவுதி அரேபியா (ரியாத் மற்றும் ஜெடா), இத்தாலி (ரோம் மற்றும் மிலான்), குவைத், ஓமான் (மஸ்கட்), ஜோர்தான் (அம்மான்) மற்றும் இஸ்ரேல் (டெல் அவிவ்) ஆகிய நாடுகளில் உள்ள இலங்கைத் தூதரகங்கள் மற்றும் கொன்சல் அதிபதியின் அலுவலகங்கள் ஆகியவற்றில் செயற்படுத்தப்படுகிறது.

இம்முயற்சி கட்டத்தின் மதிப்பீட்டைத் தொடர்ந்து, ஏனைய இலங்கைத் தூதரகங்கள் மற்றும் துணைத் தூதரகங்களுக்கும் இத்திட்டம் படிப்படியாக விரிவுபடுத்த அமைச்சு திட்டமிட்டுள்ள, அதே நேரத்தில் சாத்தியமான இடங்களில் வார இறுதி சேவை நாட்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதையும் பரிசீலிக்கிறது.

வார இறுதி நாளில் வழங்கப்படும் கொன்சியூலர் சேவைகளுக்கான திகதிகள் மற்றும் நேரங்களை குறித்த தூதரகங்கள் மற்றும் பணியகங்கள் உரியவாறு அறிவிக்கும். இந்நாடுகளில் வசிக்கும் இலங்கையர்கள் இற்றைப்படுத்தப்பட்ட தகவல்களுக்கு தொடர்புடைய தூதரகங்கள் மற்றும் பணியகங்களின் உத்தியோகபூர்வ வலைத்தளங்கள் மற்றும் சமூக ஊடக தளங்களை அணுகுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.

வெளிநாட்டு அலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சானது, சேவை வழங்கலை மேலும் வலுப்படுத்துவதற்கும், வெளிநாடுகளில் உள்ள இலங்கையர்களுக்கு துல்லியமாக பதிலளிக்கக்கூடியதும், அணுகக்கூடியதுமான கொன்சியூலர் உதவியை உறுதி செய்வதற்கும் அர்ப்பணிப்புடன் செயற்படுகிறது.

**வெளிநாட்டு அலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு**
**மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சு**
**கொழும்பு**
**2026, பெப்ரவரி 03**


**Foreign Affairs**
විදේශ කටයුතු
வெளிநாட்டு அலுவல்கள்

**Republic Building, Colombo 1**
ජනරජ ගොඩනැගිල්ල, කොළඹ 1
குடியரசுக் கட்டிடம், கொழும்பு 1
☎ 2 325 373/5, 2 207 200/7
cypher@mfa.gov.lk

**Foreign Employment**
විදේශ රැකියා
வெளிநாட்டு வேலைவாய்ப்பு

**17th Floor, "Mehewara Piyesa", Narahenpita, Colombo 5**
17 වන මහල, "මෙහෙවර පියෙස", නාරාහේන්පිට, කොළඹ 5
17 அவது தளம், "மெஹெவர பியெச", நாரஹேன்பிட்டி, கொழும்பு 5
☎ 2 331 200
info@mfe.gov.lk

**Tourism**
සංචාරක
சுற்றுலாத்துறை

**No 03, Times Building, Bristol Street (Sir Razik Fareed Mw), Colombo 1**
අංක 03, ටයිම්ස් ගොඩනැගිල්ල, බ්‍රිස්ටල් වීදිය (සර් රාසික් ෆරීඩ් මාවත), කොළඹ 1
இல.03, டைம்ஸ் கட்டிடம், பிரிஸ்டல் தெரு (சர் ராசிக் ஃபரீத் மாவத்தை), கொழும்பு 1
☎ 2 381 798, 2 321 222
secretary@tourismmin.gov.lk